1989 ஏப்ரல் 27] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

4. புதிய வார்டு மற்றும் நுண்கதிர் பிரிவுகளுக்குத் தேவையான உபகரணங்கள், எக்ஸ்ரே கருவி ஆகியவை பொருத்தப் பட்டவுடன் புதிய கட்டிடம் முழுமையாகச் செயல்படத்துவங்கும்.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் ஆப்பரேஷன் செய்துக்கொள் வதற்கும், எக்ஸரே எடுப்பதற்கும் 40 கிலோ மீட்டர் தூரத்தி லுள்ள சேலம் அரசு பொது மருத்துவமனைக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கேதான் இப்படிப்பட்ட சிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, விரைவிலே இந்த மருத்துவ மனையை திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவரவர்களே, கடந்த காலங்களிலே பல மருத்துவமனைகள் கட்டப்பட்டு அவை, திருமணமாகி முதலிர வுக்குக் காத்திருக்கும் தம்பதியரைப்போல நீண்டகாலமாக திறக் கப்படாமலேயே வைக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப் பினர் அவர்களுடைய தொகுதியிலே கூட கட்டப்பட்டு மூன்று ஆண்டுகளாகியும் திறக்கப்படாத மருத்துவமனை இருப்பதை நினைவுபடுத்துகிறேன். அதைப்போன்று பல மருத்துவ மனைகள் திறக்கப்படாமலேயே இருக்கின்றன என்பதைக் கருத்தில்கொண்டு திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் 16 படுக்கைகள் கொண்ட பிரிவு, எக்ஸ்ரே பிரிவு ஆகியவைகளைச் செயல்படுத்தத் தேவையான உபகரணங்கள் வாங்கவும், கூடுதல் பணியிடங்களை உருவாக்க வும், ஏனைய தொடரும் செலவினங்கள் அனுமதிக்கவும் 1989-90-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் சேர்க்கப்பட்டு செயற் படுத்த அரசின் ஆய்வில் உள்ளது. ஆகவே, அத்தகைய உப கரணங்கள் வாங்கி முடிந்தவுடன் விரைவில் திறப்பதற்கு முயற்சி எடுக்கப்படும்.

திரு. க. பழனிசுவாமி : தலைவரவர்களே, ஆப்பரேஷன் செய்வதற்கு எம். எஸ். பட்டப்படிப்பு படித்த அறுவை சிகிச்சை டாக்டர்களையும் அதிகமான குழந்தைகள் சிகிச்சைக்கு வருவ தால் குழந்தைகள் சிகிச்சைக்கு டி. சி. எச். படித்த டாக்டர் களையும் நியமிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கின்ற தெய்வசிகாமணி : அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

7 சட்ட முன் வடிவுகள்.

சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1989

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவைப்'' பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) சட்டமன்றம் (தகுதியின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் (தகுதியின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) மாநகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப்பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.